1990 ஏப்ரல் 21]

கால்நடை மருத்துவர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்குதல்

* *3744* திரு. வி. தம்புசாமி :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கால்நடை மருத்துவர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. வி. தம்புசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவர்கள் தங்குவதற்கு மருத்துவமனைக்கு அருகாமையில் வீடும் கிடையாது. நீண்ட தூரத்தில் இருந்து வரவேண்டியுள்ளது. கிராமங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே மருத்துவப் பணி சிறப்பாக நடைபெறுவதற்கு அவர்களுக்கு கடனுக்காவது மோட்டார் சைக்கிள் வாங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே அவர்கள் கடன் பெற்று மோட்டார் சைக்கிள் வாங்குகின்ற திட்டம் அரசிடம் இருக்கிறது. அதன் மூலம் பயன் அடையலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10–10 மணி

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அளிக்கப்படுகின்ற மோட்டார் சைக்கிளுக்கு பெட்ரோல் வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நிதி நிலைமை அதற்கு இடம் தராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.